8. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

ஆனூர் தொகுதி உறுப்பினர் கைது செய்யப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவை தலைவர் : தென்னாற்காடு மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடமிருந்து வரப்பெற்றுள்ள செய்தியைப் பேரவைக்கு அறிவிக்கிறேன் :—

"On 1–3–81 at 18.00 hours Thiru Muthuvel, M.L.A. Vanur and 57 others were arrested when they burnt the Government Order of Kailasam Commission at Tindivanam in Tindivanam P.S.Cr. 181/81 under sections 143, 188 and 285 I.P.C. read with 7(1)A Criminal Law Amendment Act. This is for favour of information."

* திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தாங்கள் தெரிவித்துள்ள செய்தி குறித்து ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். சட்டமன்றம் இப்போது நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது என்பதைக் காவல் துறையினர் அறிந்து இருப்பார்கள். சட்ட மன்றம் நடைபெற்றுக்கொண்டு இருக்கிற இந்த நேரத்தில், இன்று காலையில் சட்டமன்ற உறுப்பினர் இங்கே வந்து சேர முடியாத நிலைமையில் கைதாகி இருக்கிறபோது, நேற்று இரவில் அவர் கைது செய்யப்பட்ட செய்தி நம்முடைய சபாநாயகர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு இருக்கவேண்டும். அப்படி தெரிவிக்காமல் இருக்கிற அந்தத் தவறான மனப்பான்மை அல்லது புரியாத தன்மை இருக்குமானால் அதைப் போக்குவதற்கு உரிய முறையில் சபாநாயகர் அவர்கள் அந்தத் துறைக்கு அறிவுரை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றைய தினம் மாலை 6 மணிக்குக் கொடுத்து இருக்கிறார்கள். இரவு 7½ மணிக்கு சென்னை தலைமைச் செயலகத்திற்குத் தகவல் வந்து இருக்கிறது. அங்கேயிருந்து என்னுடைய அலுவலகத்திற்கு வருவதற்குத்தான் காலதாமதம் ஏற்பட்டு இருக்கிறது. என்னுடைய அலுவலகத்திற்கு இன்று காலை 11–15 மணிக்குத்தான் வந்து இருக்கிறது. செய்தி கிடைக்கப்பெற்றவுடன் அவையில் அறிவித்து இருக்கிறேன். இந்தக் கம்யூனிகேஷன் கேப் எப்படி ஏற்பட்டது என்பதைக் குறித்து என்னுடைய அலுவலத்தில் விசாரிக்கச் சொல்லியிருக்கிறேன்.

[பிற்பகல் 12–20]

திரு நா. சுந்தரராஜன் : தலைவரவர்களே, இந்தச் செய்தி கிடைப்பதில் எங்கே காலதாமதம் ஏற்பட்டது என்று தங்களாலே விளக்க முடியவில்லை. எங்கே காலதாமதம் ஏற்பட்டது என்பதை அவைக்கு அறிவிக்க வேண்டியது தங்களுடைய கடமை.

1981 மார்ச் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எங்கே காலதாமதம் என்று கண்டுபிடிக்கச் சொல்லியிருக்கிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, காவல் துறையைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு அஞ்சல் வழியாகத் தான் அனுப்ப வேண்டுமென்ற அவசியம் இல்லை. உடனடியாக ஐ.ஜி. அலுவலகத்திற்குத் தெரிவித்து, சட்டமன்றம் நடைபெறுகின்றபோது உடனுக்குடன் இந்த அவைக்கு அல்லது தங்களுக்குத் தெரிவிக்கக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது. அந்த முறையை அவர்கள் கையாள வேண்டுமென்று தாங்கள் அறிவுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பொதுவாக இதுபோன்று கைது செய்தால் உடனே தந்தி கொடுப்பது வழக்கம். ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்கள் ''ஒயர்லெஸ்'' கொடுக்கலாம் என்று சொல்கிறார்கள். அதற்கு நாம் ஏற்பாடு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை ''டெலக்ஸ்'' செய்தியாகக் கொடுத்திருக்கிறார்கள். ஒருவேளை அதனால் காலதாமதம் ஏற்பட்டிருக்கும் என்று கருதுகிறேன்.

6. அரசினர் சட்டமுன்வடிவுகள்

(ஐ) பத்திரப் பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு 1981—தொடர்ச்சி.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்தப் பத்திரப் பதிவு சட்டத்தின்மீது ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். கிராமங்களிலும் சரி, நகரங்களிலும் சரி கிராம அதிகாரிகள் அல்லது சர்வே நம்பர் போன்ற விவரங்கள் தெரிந்தவர்கள்தான் பத்திரங்களை எழுதிக்கொண்டிருந்தார்கள். இப்போது புதிதாக அங்கீகாரம் என்று வரும்போது ஏற்கனவே இருந்த விவரம் தெரிந்தவர்களோடு ஒரு குறிப்பிட்ட அளவுக்கு கல்வித்தகுதியையும் சேர்த்து அவர்களை அங்கீகாரம் செய்வதோடு, கிராம உத்தியோகஸ்தர்களாக இருந்து பதவி இழந்தவர்களுக்கு அதிலே முன்னுரிமை கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

பத்திரத்தைப் பொறுத்த வரையில் 1 சதவீதம் அல்லது $1\frac{1}{2}$ சதவீதம் கமிஷன் மட்டுமே கொடுக்கிற காரணத்தால் இன்றையதினம் விரைவிலே எழுத வேண்டுமென்று சம்பந்தப்பட்ட